உ
சிவமயம்

# காரைநகர் வாரிவளவு
# கற்பக விநாயகர்



வெளியீடு - 1

# புகழ் நூற் கோவை

07-04-2001

உ

சிவமயம்



# காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் புகழ் நூற் கோவை

வெளியீடு: 1

**07-04-2001**



ஆலய மூல மூர்த்தி

உ

சிவமயம்

# காரைநகர் வாரிவளவு
# கற்பக விநாயகர் ஆலய மலர் வெளியீடு
## வாழ்த்துரை

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

என்பது எமது சிந்தையில் என்றும் நின்று நிலவவேண்டிய ஒரு பாடலாகும். வாழ்வு என்பது இறை நம்பிக்கையோடும் உயர்ந்த குறிக்கோளோடும் அமைய வேண்டிய ஒரு நெறியாகும். மனிதனுடைய இலட்சியம் ஆலயங்களை மையமாக வைத்தே உயரவேண்டும். ஆலய வழிபாட்டினால் உள்ளத்துக்கு அமைதியும் வாக்குக்குத் தூய்மையும் செயலுக்குத் திருப்தியும் ஏற்படுகின்றது.

காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் தனது அடியார்கள் உள்ளத்தில் கற்பகமாக நின்று பயனளிப்பவர்.அற்புதமான நிகழ்வுகள் நிறைவேற ஆதாரமாக அமைந்தவர் இவரே. தன் அடியவரைக் கர்மயோகிகள் ஆக்கிப் பெருமை பெறச் செய்தவரும் இவரே. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாலய த்துக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆண்டுதோறும் இங்குசென்று சொற்பொழிவாற்றிய பெருமிதமும் எனக்குண்டு. நற்ப ணிகள் பல செய்வதற்கு என்னைத் தூண்டியதையும் மகிழ்ச்சியோடு எடுத்துக் கூறுகின்றேன். விநாயகப் பெருமானின் அற்புதமான பாடல்கள் அடங்கிய விநாயகர் புகழ்நூற்கோவை ஆகிய நூல் வெளிவருவது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். எனவே ஆலய அறங்காவலரையும் பெருமானின் மீளா அடியார் களையும் வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

வணக்கம்.

**02-04-2001**

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர் :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை,

# விநாயகமூர்த்தி பதிகம்

பன்னிருசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

சீர்கொண்ட கிரணசந்
திரசடா மகுடமுந்
திரியம்ப காம்போஜமுந்
திடகரட கடவிகட
ஜயகும்ப கெம்பீர
திவ்யகுஞ் சரவதனமுந்

தார் கொண்ட பரிமள
சதுர்ப்புய விலாசமுந்
தரளவெக் ஞோபவீத
தடமார்ப லம்போ
தரப்ரவா கமுமுசித
தவளாம்ப ரானந்தமுங்

கூர்கொண்ட பாசாங்
குசாஸ்தமுங் கிண்கிணி
குலுங்குபத முங்கண்டியான்
கும்பிட் டிறைஞ்சவருள்
கூர்ந்துதவ வேண்டுநய
குணசகல பரிபூரணா

வார்கொண்ட களபதன
வல்லபை மனோகரா
வளமுறுந் துறைகடோறு
மருவுபிர ணவவேத
சொரூபசம ரசநீத
வரதசிவ கணநாதனே.

உ

சிவமயம்

# பதிப்புரை

வரமழை பொழிந்து அன்பர்களை வாழ வைப்பவர் காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர். நடைபெறவேண்டிய திருவிழாக்கள் விதிமுறையாக நிகழ்கின்றன. வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தினர் கற்பக விநாயகப் பெருமானை பாடிப் பரவுகின்றனர். அவ்வவ்போது பாராயணம் செய்ய வேண்டிய தோத்திரப்பாக்களினாலே பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

நாடும் நகரமும் நாமும் வாழும் படியாக அருள்பாலிக்கும் வாரிவளவு கற்பக விநாயகப் பெருமானின் அருள் பிரவாகத்திற்கு உதவிய முன்னோர்கள் என்றும் போற்றுதற் குரியர் எதிர்காலத்திலும் அப்பெரியார்களை நினைவு கூரவும் விநாயகப் பெருமானை தோத்திரம் செய்யவும் வசதியாக காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் புகழ்நூற்கோவை வெளிவருகிறது. விநாயகக் கடவுள் வழிபாடு செய்பவர்கட்கு உதவக்கூடியதாக விநாயகப் பெருமானின் அருள் பெற்ற அருளாளர்கள் பாடியருளிய பாடல்கள் இக் கோவையில் இடம்பெறுகின்றன.

கற்பக விநாயகர் புகழ்நூற்கோவை ஆகிய இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய பிள்ளையார் அச்சகத்தினருக்கும் வாழ்த்துச் செய்தி தந்து வாழ்த்திய பெரியார்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிய பெரியார்களுக்கும் நன்றி தெரிவித்து அனைவருக்கும் கற்பக விநாயகப் பெருமான் அருள்பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

-நிர்வாகஸ்தர்-

# சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் விடுக்கும் வாழ்த்துச் செய்தி

இந்து சமயத்தவர்கள் மத்தியில் விநாயகர் வழிபாடு மிகவும் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்துக்கள் தாம் எக்காரியத்தை ஆரம்பிக்க முன்பும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே காரியங்களை ஆரம்பிப்பார்கள். இடையூற்றை நீக்குபவரும் எடுத்த கருமங்களைக்கைகூடச் செய்பவரும் கணபதியே என்பதனால் நாம் முதலில் அவரை வணங்குகின்றோம். இதனாலேயே அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று. இந்து சமயக் கிரியைகள் அனைத்தையும் ஆரம்பிக்கும் சிவாச்சாரியார்கள் விநாயகப்பெருமானை வணங்கியே ஆரம்பிப்பார்கள். விநாயகருக்குரிய பின்வரும் மந்திரத்தைக் கூறிக் கிரியைகளை ஆரம்பிப்பார்கள்.

"சுக்கிலாம் பரதரம் விஸ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் தியாயேத் சர்வ விக்னோப சாந்தயே" பயனையும் விநாயகர் வழிபாட்டின் சிறப்பினையும் அருளாளர்கள் அருளிய பல பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. திருமுறை வரிசையில் பதினோராம் திருமுறையில் விநாயகப் பெருமானைத் துதிக்கும் பல பாடல்கள் காணப்படுகின்றன. நாம் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்துக்கும் கன்மவினையே காரணம் என நமது சமய நூல்கள் கூறுகின்றன. எமது கன்மவினையை வேரோடு அறுப்பதற்கும் பிரபஞ்சப் பற்றுக்களை நீக்கி இறைவன் திருவடியைப் பற்றுவதற்கும் விநாயகப்

பெருமானின் திருவருள் துணை வேண்டும் என்பதை கபிலதேவ நாயனாரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

ஈழத்தில் விநாயக வழிபாடு மிகச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாக் கிராமங்களிலும் விநாயகப் பெருமானுக்குக் கோயில்கள் உண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவமும் தமிழும் சிறப்புற்றுத் திகழும் கிராமங்களில் காரைநகரும் ஒன்றாகும். திருமகளின் கடாட்சம் பெற்ற பிரபுக்கள் பலர் வாழும் கிராமமாகிய காரைநகரில் பல சைவாலயங்கள் உண்டு. "ஈழத்துச் சிதம்பரம்" என்று போற்றப்படுகின்ற பெருமை மிக்க சிவாயலமும் இங்குதான் உண்டு. விநாயகப் பெருமான் காரைநகரின் வாரிவளவுப் பிரதேசத்தில் இருந்து ஞான ஆட்சி புரிகிறார். நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையினால் இவ்வாலயத்தில் நித்திய நைமித்திக கிரியைகள் சிலவருட காலம் தடைப்பட்டன. விநாயகப் பெருமான் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருக்கும் திரு. சி.சிவஞானம் அவர்களும், குலதெய்வமாகிய விநாயகப் பெருமானை வழிபடும் அடியார்களும் இதனால் மிகவும் துன்பப்பட்டார்கள். விநாயகப் பெருமானுடைய சந்நிதானத்தில் நித்திய நைமித்திக கிரியைகள் ஒழுங்காக நடைபெற்றால்தான் தங்களதும் தங்களுடைய சந்ததியினரதும் வாழ்வில் ஒளி வீசுமென நம்பினார்கள். அனைவருடைய கூட்டு முயற்சியினாலும் சிறந்த சக்தி உபாசகராகிய சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் அவர்களால் ஆலயத்தில் சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடத்தப்பெற்று

தொடர்ந்து நித்தியநைமித்திக கிரியைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

மனத்திலே சலனமில்லாமல், புத்தியிலே கெடுதி எதுவும் தோன்றாமல், மோன நிலையாகிய ஞானநிலையைப் பெறுவதற்கும், நிறைந்த செல்வமும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ்வதற்கும் கணபதியின் துணை வேண்டும் என்பதனை மகாகவி பாரதியாரியின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலனமில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மௌன
நிலை வந்திட நீ செயல்வேண்டு
கனக்குஞ் செல்வம், நூறுவயது
இவையும் தர நீ கடவாயே.

அறிவுத் தெய்வமாகவும் அடியார்களின் அவலங்களைப் போக்கும் அருள் தெய்வமாகவும், வேண்டும் வரங்களை வாரி வழங்கும் கருணைத்தெய்வமாகவும் காட்சி தருகின்ற காரைநகர் வாரிவளவு விநாயகப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.





உ

கணபதி துணை

# காரைநகர் வாரிவளவு

# கற்பக விநாயகர் ஆலயம்

## வரலாற்றுச் சுருக்கம்

### அமைவிடம்

இலங்கையின் வடபாலமைந்த எழில்மிகு யாழ்ப்பாண தீபகற்பத்தைச் சூழ்ந்த சப்த தீவுகளில் ஒன்றும், பலபுண்ணிய சைவத் திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதும், உண்மைச்சமய வாழ்வினைக் கைக்கொண்டு இறைவழிபாடாற்றி வருகின்ற சைவப் பண்பாடு மிக்க மக்கள் வாழும் பிரதேசமாக விளங்குகின்ற (காரைதீவு) காரைநகரில் பல சைவ ஆலயங்கள் உள.

இவற்றில் காரைநகரின் மேற்குவீதியில் வாரிவளவு எனும் பதியில் உள்ள "குப்பரைப்புலத்தில்" 1880ஆம் ஆண்டு சுப்புடையார் பரம்பரையினால் மண்கோயில் ஒன்று அமைத்து மூலவராக விநாயகப் பெருமானை எழுந்தருள வைத்து அவ்வூர் மக்கள் வழிபட்டு வந்தார்கள்.

### அறங்காவலர்

சுப்புடையார் பரம்பரையின் வழித்தோன்றலாகிய அமரர்கள் இராமநாதர், தம்பையா ஆகியோரின் காலங்களில் ஆலயம் சுண்ணாம்புக் கட்டடங்கள் கொண்டு புதுப்பிக்கப்பெற்றன.

தம்பையா அவர்கள் அமரத்துவம் பெற அவர்தம் இளைய புதல்வன் திரு.கணேசபிள்ளை அவர்கள் 1967ஆம் ஆண்டு அமரத்துவம் அடையும் வரை ஆலயத்தை மிகச்சிறப்பாக தனது மூத்த சகோதரர் அமரர் சுப்பிரமணியம்

அவர்களின் உதவியுடன் பராமரித்து வந்தார். கணேசபிள்ளை அவர்களின் காலத்தில் கோயிலின் சிமெந்துக் கட்டடங்கள் அமைக்கப் பெற்று கோயிலின் அன்றைய பூசகராக இருந்து அமரத்துவம் அடைந்த பிரம்மஸ்ரீ சிவசர்மா அவர்களின் உதவியுடன் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

திரு.கணேசபிள்ளை அமரத்துவம் அடைய அவரின் மனைவி திருமதி பரமேஸ்வரி அவர்கள் சிறுவர்களாக இருந்த தமது மூன்று ஆண்பிள்ளைகளுடன் ஆலயத்தை தமது சக்திக்கேற்பப் பராமரித்தார். அன்னாரின் உடல்நலக்குறைவு காரணமாக 1972ஆம் ஆண்டு சித்திரை மாதம் மூன்று பேர் கொண்ட நிர்வாக சபையில் திருவாளர்கள் ஈ.வி.கார்த்திகேசு, க.கணபதிப்பிள்ளை, சி.சிவஞானம் ஆகியோரை நியமித்து நிர்வாகப் பொறுப்பினை ஒப்படைத்தார். ஒரு சில மாதங்களில் நிர்வாக சபையின் முதல் இருவரும் தங்கள் பொறுப்பினை மற்றவரிடம் கையளித்து தாங்கள் அமரத்துவம் அடையும் வரை இன்றைய நிர்வாகஸ்தருக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### இராஜகோபுரம்

எப்பூஜையிலும் முதற்பூஜை கொள்ளும் விநாயகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்க அமரர் முருகேசு சிதம்பரப்பிள்ளை (செம்பரியார்) விரும்பினார். இவர் அன்றைய அறங்காவலர் இராமநாதர் தம்பையாவின் மருமகன் ஆவார். செம்பரியார் 1945ஆம் ஆண்டு சுன்னாகத்திலிருந்து மாட்டுவண்டிகள் மூலம் பாரிய வெள்ளைக் கற்களைக் கொண்டு வந்து அத்திவாரம் இட்டு ஊர் மக்களிடம் பிடியரிசியைக் காணிக்கையாகப் பெற்று (வியாழவரிவரை) இராஜகோபுர வேலையை செய்வித்தார்.

### செம்பரியாரின் கனவு

பண நெருக்கடி காரணமாக தனது ஆசை நிறைவேறவில்லை என அமரர் சிதம்பரப்பிள்ளை கோயிலின் முன்வீதியில் நின்று பல முறை தேம்பித் தேம்பி அழுதது

வீண்போகவில்லை .......அன்னாரின் கனவை நனவாக்கவும், முழுமையான கோபுரத்துடன் காரைநகரில் ஒரு கோயிலும் அமைக்கப் பெறவில்லை என்ற குறையினை நீக்கவும், சைவமுறைப்படி விநாயகருக்கு முதலில் கோபுரம் அமைக்கவேண்டும் என்பதற்கு இணங்கவும் இன்றைய வாரிசுகள் 1981ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பின் பின்னர் கோபுர வேலையை நிறைவேற்ற வேண்டும் எனவும் மணிமண்டபம் ஒன்று அமைக்க வேண்டும் எனவும் எண்ணினர்.

எண்ணக்கருவை செயலாக்க அவர்தம் ஆசையினை நாம் எல்லோரும் அன்புடன் "அம்மா" என அழைக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அறங்காவலர் சபைத்தலைவி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் கூறினர்.

சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்றிவரும் அம்மா அவர்கள் காரைநகர் மக்கள் மேற்கொண்ட அன்பினாலும் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத்திற்கு என்றும் உதவி புரியும் மனப்பான்மையால் தென்னிந்தியாவின் தமிழ்த் திருநாட்டிலிருந்து திரு.கே.இராமமூர்த்தி தலைமையில் நான்கு சிற்பாசாரியர்களை அழைத்து வந்து 06-06-1981 அன்று வியாழவரியிலிருந்து கோபுர வேலைகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

### 1982ஆம் ஆண்டு கும்பாபிஷேகம்

காரைநகர் மக்கள் குறிப்பாக கோவளம் தொடக்கம் பலகாடு வரை உள்ளவர்களின் உதவியுடன் 31-01-1982 அன்று ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரத்தில் மூலவருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் ஐந்துதள இராஜகோபுரத்திற்கும் அமரத்துவம் அடைந்த சிவஸ்ரீ.இராமநாதக்குருக்கள் (இணுவில்) அவர்கள் தலைமையில் அவரின் மருமகன் அமரர் அரியாலை சிவஸ்ரீ.பாலசுப்பிரமணியக்குருக்கள் சிறப்புடன் நடத்தி வந்தார். இத்தினம் இவ்வாலயத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தினமாகும்.

அடியார்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க திரு.க.பாலசிங்கம் என்ற அன்பர் தென்னிலங்கையிலிருந்து யானை ஒன்றினைக் கொண்டு வந்து எம்பெருமான் அதன்மேல் பவனிவருவதைக் கண்டு ஆனந்தமடைந்தனர். அன்று மக்கள் கூட்டத்தின் பக்திப் பரவசத்தை கூறவும் வேண்டுமா?

## தேர்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை இரதோற்சவமாகக் கொண்டு பத்துநாள் மகோற்சவம் இவ்வாலயத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ஆலயத்தில் அதிக ஈடுபாடு கொண்டவரும் அறங்காவலர் தம்பையாவின் உறவினருமாகிய அமரர் சி.கந்தையா பெருமானுக்கு தேக்கு மரத்தினால் தேரினை அமைக்க விரும்பி தென்னிந்தியாவிலிருந்து திரு. வீரபத்திர ஆசாரியார் தலைமையில் மூன்று ஆச்சாரியார் குடும்பங்களை இங்கு அழைத்து வந்தார்.இவர்கள் மூன்று வருடங்களில் பல கலையம்சங்கள் பொருந்திய தேரினை அமைத்து 1926ஆம் ஆண்( வெள்ளோட்டத்தினை நடத்தினார்.

அமரர்.திரு.கந்தையா அமரத்துவம் அடைய அவரின் ஏகபுதல்வர் திரு.சி.க.கணேசன் தந்தையின் வழியைப் பின்பற்றி இன்றுவரை தேரினைச் சிறப்பாகப் பராமரிப்பதுடன் தேர்த்திருவிழாவினையும் சிறப்புடன் நடத்தி வருகின்றார்.

## ஆலய வளர்ச்சி

கும்பரைப் புலத்திலிருந்து தம் அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானை அவ்வூர் மக்கள் மிகவும் பக்தியுடன் வழிபடுகின்றனர். கோயிலின் திருப்பணிக்கு அடியார்கள் காலத்திற்குக் காலம் வாரிவாரி வழங்கியதனால் மண்கோயிலாக அமைக்கப்பெற்ற ஆலயம் காலப்போக்கில் சி மெந்துக் கட்டடம் கொண்டு அமைக்கப்பட்ட மண்டபங்களும் மாறி இன்று கலையம்சங்கள் பொருந்திய ஐந்துதள இராஜகோபுரத்துடன் முன்புறம் மணிமண்டபம் அமையப்பெற்று காண்போர் எல்லோரும் கைகூப்பி வணங்கக்கூடிய சூழல் அமையப் பெற்றுள்ளது.

ஆலய வளர்ச்சி கட்டடங்களைக் கொண்டு மட்டும் அளவிட முடியாது. இதனை நன்கு உணர்ந்த எம்மக்கள் நிர்வாகத்துடன் பூரணமாக ஒத்துழைத்து இன்று சைவ கிரியைமுறைப்படி நித்திய, நைமித்திய பூசைகள் அனைத்தும் ஒரு கட்டுப்பாட்டுடன் நடைபெற ஒத்துழைக்கின்றனர்.

இங்கு வெள்ளிக்கிழமை, தமிழ்மாதப்பிறப்பு, அபிஷேகம் குறிப்பிடத்தக்கது. விநாயகப் பெருமானின் விரதங்களில் ஒன்றாகிய மாத சதுர்த்தி விரதமும் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றது.

கிராமத்திற்கும் நாட்டிற்கும் நல்லாசி வேண்டி தமிழ்த் திருநாளாம் தைப்பொங்கல் அன்றும் தமிழ்சித்திரை புத்தாண்டு அன்றும் கணபதி ஹோமத்திற்கு வேண்டிய அனைத்து அவிப்பொருட்களும் அக்கினிக்கு ஆகுதி கொடுத்து இந்த ஓமம் இங்கு ஆண்டுக்கு இருமுறை நடைபெறுவது வழமை.

**இருண்டகாலம்**

மேற்குறிப்பிட்டவாறு ஆலயம் வளர்ச்சி அடைந்து வரும்போது 1991ஆம் ஆண்டு மஹோற்சவத்திற்கு சில தினங்கள் முன்னர் காரைநகர் மக்களில் பெரும்பான்மையானோர் சடுதியாக இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.இதனால் நித்திய நைமித்திய பூஜைகள் 1997ஆம் ஆண்டு ஆவணிமாதம் வரை நடைபெறவில்லை. இதனையிட்டு எம்ஊர் மக்கள் மிகவும் மனவருத்தம் அடைந்தனர்.

இருந்தும் வாரிவளவில் இருந்த ஒரு சில குடும்பங்களின் பெருமுயற்சியினால் ஒரு மாதத்தின் பின்னர் கோயிலின் திருவிளக்கு ஏற்றப்பட்டு பின்னர் படிப்படியாக

பொங்கல்கள், படையல்கள் அவர்களினால் நடைபெற்றன. இக்காலத்தில் ஆலயத்தினையும் தேரினையும் பராமரித்த அனைவரும் எம்மால் என்றும் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களில் அமரர் சின்னத்துரை கணேசன்(ஒலிபெருக்கி) அவர்களும் கணபதிப்பிள்ளை தியாகராசா (மாவுடையார்) அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். தியாகராசாவின் மறைவின் பின் அவர்தம் பாரியார் திருமதி சிவகாமிப்பிள்ளை(பாக்கியம்) அவர்கள் 1996ஆம் ஆண்டு வைகாசி விசாகம் அன்று நாம் அங்கு செல்லும் வரை ஆலயத்தைப் பராமரித்து வந்தார்.

### அந்தரித பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

1996ஆம் ஆண்டு வைகாசி மாதம் விசாகத் தினத்தன்று வேலணை ஊர்காவற்றுறை வீதி ஊடாக நாம் வாரிவளவிற்குச் சென்றிருந்த போதும் 1997ஆம் ஆண்டு ஆவணிமாதம் நான் அந்தரித பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடத்தக்கூடிய சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது. எமது பெருமதிப்புக்குரிய சிவபதமடைந்த பேராசிரியர் சிவஸ்ரீ.கா.கைலாசநாதக்குருக்கள் அவர்களிடம் வேண்டிய ஆலோசனைகளை அவுஸ்திரேலியாவில் இருந்து கடிதம் மூலம் பெற்றோம். குருக்கள் ஐயா அவர்களின் அன்புக் கட்டளைக்கு இணங்க அவரின் மாணவரும் நல்லூர் சிவன்கோயில் பிரதமபூசகராகிய பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்தன் ஐயா அவர்கள் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ பரமசாமிக்குருக்கள் அவர்களின் தலைமையில் மேற்படி கும்பாபிஷேகத்தினை நடத்தித் தடைப்பட்டிருந்த ஆலய நித்திய பூசைகளைத் தொடக்கி வைத்தார்கள்.

" தெட்சணை கொடுக்கப் பழகிக் கொள்ளுங்கள்" என ஒரு சில குருமார் கூறும் காலத்தில் அன்புடன் தரும் யாவும் ஒரு தெட்சணை தான் எனக் கூறிய எமது

மதிப்புக்குரிய கிருஷ்ணானந்தன் ஐயா அவர்கள் தனது மூன்று நாள் தொண்டிற்காக ரூபா ஒன்றை (1ரூபா) மட்டும் எம்மிடம் தெட்சணையாகப் பெற்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பூஜைகள் தடைப்பட்டிருந்த காலத்தில் ஆலயத்தில் விக்கிரகங்கள் யாவும் அசைக்கப்பெற்றிருந்ததனை நாம் கண்டு மிகவும் மனம் வருந்திய வேளையிலே மூலமூர்த்தியாகிய விநாயகரின் விக்கிரகம் மட்டும் எவ்வித அசைவுமின்றி இருந்ததைக் கண்டு விநாயகப் பெருமானின் திருவருளை நினைத்து ஆனந்தமடைந்தோம்.

**ஆலய அந்தணப் பெரியோர்கள்**

இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூஜைகளை கடந்த காலங்களில் பல அந்தணப் பெரியோர்கள் சிறப்புற நடத்தினார்கள். அவர்களுள் சிவபதமடைந்த சிவஸ்ரீ.நடராசாக்குருக்கள் (ஊர்காவற்றுறை) அவர்களும் சிவஸ்ரீ.கு.பாலசுப்பிரமணியக்குருக்கள் (அரியாலை) அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

நித்திய பூஜையில் அமரத்துவமடைந்த பிரம்மஸ்ரீ.சோமசுந்தரஐயர் அவர்களும் அவரின் மகன் பிரம்மஸ்ரீ சிவசர்மா அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

1981ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயரும் காலம் வரை தனது சொந்த ஆலயம் போல நித்திய பூஜைகளை நடத்திய சிவஸ்ரீ.தி.பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் என்றும் நினைவுகூரத் தக்கவர்கள்.

**அடியார்களுக்கு ஒரு வேண்டுகோள்**

சைவ ஆகம முறைப்படி 1982ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்ற கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 1995ஆம்

ஆண்டளவில் விநாயகப் பெருமானிற்கு கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்க வேண்டும். நாட்டின் இன்றைய நிலை காரணமாக இதனை நிறைவேற்ற முடியவில்லை.

ஆனால் நிலைமை சுமுகமடையும் பட்சத்தில் இதனைச் செய்ய வேண்டிய பொறுப்பு எம் அனைவரிடமும் உள்ளது. இதற்கான திட்டத்தினை நாம் ஓரளவு தயார்ப்படுத்தி வைத்துள்ளோம். எமது எதிர்கால சந்ததியிடம் இப்பாரிய பொறுப்பினை நாம் கையளிக்காது கலையம்சங்கள் பொருந்திய மண்டபங்களை அமைத்து எம்மை என்றென்றும் வாழவைத்துக் கொண்டிருக்கும் "வாரிவளவானுக்கு" எம் பங்களிப்பைச் செய்ய நாம் பின்னிற்கக் கூடாது.

நாம் தயாரித்து வைத்திருக்கும் திட்ட உத்தேச செலவில் 50% ஐ வெளிநாடுகளில் வாழும் அன்பர்களிடமிருந்தும் மிகுதி 50% ஐ உள்நாட்டிலும் சேர்க்க விரும்புகின்றோம்.

இதற்காக ஒவ்வொரு அடியாரும் தாம் செலுத்தவேண்டிய காணிக்கையைத் தாமே தீர்மானித்து எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமக்குச் சேரும் தொகை கணிசமான அளவாக இருந்தால் எமது சமய அமைப்பிற்கு இணங்க ஒரு சில சமூக சேவைகளைக் குறிப்பாக கல்வி, சுகாதாரம் சம்பந்தமான சேவைகளையும் எமது ஆலயம் ஊடாகச் செய்ய உத்தேசித்துள்ளோம்.



உ

கணபதி துணை

யாழ்ப்பாணம், காரைநகர் வாரிவளவென வழங்கும்

கும்பரைப் புலத்தில் எழுந்தருளியிருக்கும்

# கற்பக விநாயகர் திருவூஞ்சல்.

## காப்பு

சீர்மேவு மதி நதியோடரவு சூடுஞ்
சிவபெருமா னுமையருஞ் செல்வனாகிப்
பார்மேவு காரைநக ரதனி னீடும்
பதிவாரி வளவெனவே பகருமற்றோர்
பேர்மேவு கும்பரைப் புலத்தில் வாழும்
பெம்மானெங் கற்பக விநாயகன் மேல்
நார்மேவு மூஞ்சலிசை யொன்றுபாட
நாடுமவன் திருவடிகள் காப்பதாமே.

## நூல்

துங்கமுறு நால்வேதங் கால்களாகத்
தூயசிவா கமமவையுத் தரம தாக
அங்கமவை யோராறுங் கயிற தாக
ஆருமுப நிடதங்கள் பலகை யாகப்
பொங்கு மணியட்சரங் களணை களாகப்
பொருந்து பிரணவமே யோருருவ மாகக்
கங்கமிளர் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல் 2

அம்புயனு மரியுமிகு மகிழ்விற் கூட
அமரர்புரி பல்லாண்டினகில நீடச்
கிம்புருடர் கின்னரர்கள் கீதம் பாடக்
கிளிமொழியா ரரமகளிர் நடனமாடத்
தும்புருநா ரதரிசையின் யாழை நாடச்
சூழவரு கணநாதர் தாளம் போடக்
கம்புலவுங் கும்பரைப்பு லத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடிரூஞ்சல். 3

ஏரணவுங் கண்ணாடி கவரி காட்ட
இலகு குடை கொடியால வட்ட நீட்டத்
தோரணங்கண் மாலை நிரை துவசம் பூட்டச்
சோபிதமாய்த் தீப நிரையிருளை யோட்டப்
பாரணமா நிவேதனங்கள் பலவு மூட்டப்
பரவுமெழின் மாதருயர் வடந் தொட்டாட்டக்
காரணிசெய் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 4

எண்ணிய வாண்டொரு நூறொடைபதின்முன்
இரவிசிதம் பரவுடையா ரிசைந் தபூசை
புண்ணியவா றவர் தோன்றல் காசிநாதர்
பரித்தபடி சேய்சுப்ப வுடையார் போற்றிப்
புண்ணியமார் புத்திரப் பேறடைய வேண்டிப்
புரியுமடா லயமதனிற் பொலிந்த மூர்த்தி
கண்ணயமார் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 5

நற்கனக சூரியர்தம் மரபு பேணி
ஞால மிளிர் சுப்பவுடையாரின் செம்மல்
சற்குணனி ராமநாதன் தலைமை போற்றச்
சாருமசு பதிநாளி னங்கு ரித்த

பொற்கலைதேர் மகன்புநருத் தாரணஞ்செய்
பொருவிறிருப் பணிக் கோயிலுறை யுந்தேவ
கற்கசரில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 6

அணியிலகு கோயிற்ப திட்டை யாதி
அரியதிருத் தொண்டினிடை மனமதாரக்
குணியிலகு நிதிகோலி வருடந்தோறும்
குலவு பணிபற்பலவுஞ் செய்வோர் மேலும்
மணியிலகு சுதர்முதல பாக்கியங்கள்
மருவிய நல் வாழ்வருளுங் கடவுணீடுங்
கணியிலகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 7

மூவடியார் திருமேனி பொலிவு பூப்ப
முடிமுதலா மணிப்பணிகளிருள்கால் சீப்பச்
சேவடிகள் சேவிப்போர் கரங்கள் கூப்பச்
சேரருளிற் சித்திபுத்தி மகிழ்ந்து காப்பக்
கோவடையுந் தேவர்மலர் மாரிதூர்ப்பக்
கும்பமுனி தனக்கருளும் விமலநாத
காவடையுங்கும் பரைப்புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 8

உலகவுரு வானரத மதனிலூர்ந்து
உம்பருடனிம் பரமேயினிது போற்றும்
அலகிறிருவமை விழாச் சிறப்புப் பூசை
ஆயமுறை நியமமாக வாண்டு தோறும்
இலகவினி தாற்றுமெச மானன்றானும்
இருநிதிய மீய்குநரு மென்றும் வாழக்
கலைகள்மிகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 9

வேதமுதற் பொருளான தேவே போற்றி
வேண்டுவா மெவையுமரு டருவோய் போற்றி
பாதிமதி சூடியருள் பகவ போற்றி
பன்னிருகை வேலவனார் முன்னோய் போற்றி
மாதுவல வைக்கினிய மணாளாபோற்றி
காதரமில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீருஞ்சல். 10

சிவைதருசீரைங் கரரே யாடீருஞ்சல்
தேறாதார் பயங்கரரே யாடீருஞ்சல்
சுவைதரு சீர்ப் பரம்பொருளீ ராடீருஞ்சல்
தூயவர்தம் மனப்பொருளீ ராடீருஞ்சல்
குவைதருமோங் காரமுளீ ராடீருஞ்சல்
கதைதருபூங் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீருஞ்சல். 11

## வாழி

மன்னுமறை யந்தணர் பின்னோர்கள் வாழி
படியிலுயர் மழைவளஞ் சுரந்து வாழி
தன்னிகரில் சைவநெறி சிறந்து வாழி
தருவளரு மமரரொடு சுரபி வாழி
கன்னியர்கள் கற்பு நெறிநின்று வாழி
காரைநகர் கும்பரைப் புலத்தில் வாழி
சொன்னநிறை கற்பக விநாயகன்றன்
சுகிர்த திருவருணீடு வாழி வாழி. 12

## எச்சரீக்கை

மூவாமுழு முதலேகஜ முகனே யெச்ச ரீக்கை
மூவர் முதற் றேவர்பணி மூர்த்தி யெச்சரீக்கை
தூர்வாசமி மந்தாரைகொள் சோதீ யெச்சரீக்கை
தொலையாப்பவத்தழுந்தாதருள தோன்றாலெச்சரீக்கை

தூவேலவன் முன்னேவரு துணைவா வெச்சரீக்கை
தொன்மைக்கர மைந்தோடொளிர் தூயாவெச்ச ரீக்கை
பூவார் பொழிற் காரைநகர் பொலிவா யெச்ச ரீக்கை
புகழ் கும்பரைப் புலத்தடியா ரருடபுனிதா வெச்சரீக்கை

## பராக்கு

ஓமெனுயர் பிரணவசொ ரூபா பராக்கு
உம்பர்பணி யம்பொனடி யுடையாய் பராக்கு
தோமில்சிவ சக்திதரு சுதனே பராக்கு
துன்னுகண நாதர் புகழ் ஸ்வாமி பராக்கு
வாமமுறு வலைவைபுணர் மகிணா பராக்கு
வஞ்சமிலர் நெஞ்சநிறை வரதா பராக்கு
சேம மிகு காரைகும்பரைப் புலத்தடியாய் பராக்கு
செகமுணர வரியபர தேவா பராக்கு. 14

## மங்களம்

திருவந்த சதுர்மறைப் பிரகாச பிரணவந்
திகழ்ரூப திருமங்களம்
சிவகுமர மலரகித சின்மயப ராநந்த
செகதீச திருமங்களம்
அருமந்த ராமனுறு மதிவீர கத்திதெற
மபிதான திருமங்களம்
அடர்சூரனுரனூறு முருகேசன் முன்னவா
அமரேச திருமங்களம்
மருவந்த குழன்மாது வல்லபையின் பெருநேச
மணவாள திருமங்களம்
மகிமீதெ னிதமூறு விசுவாச கணநாத
வரதீர திருமங்களம்
உருவந்த லட்டுகமொ டங்குசம் பாசகர
மொளிர் தேச திருமங்களம்
உயர்காரை நகர்மேவு கும்பரைப்புலப் பதிவாச
வுமைபால திருமங்களம்

முற்றுப் பெற்றது.



உ

சிவமயம்

# தேவாரம்

## முதலாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**பண் : நட்டபாடை** **இராகம் : கெம்பீரநாட்டை**

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளுமடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயலார் புனற் செல்வ மல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே.

**பண் : வியாழக்குறிஞ்சி** **இராகம் : சௌராஷ்ட்ரம்**

சந்த நன் மலரணி தாழ் சடையன்
தந்த மதத்தவன் றாதையோதான்
அந்தமில் பாட லோனழகனல்ல
எந்தவனிரா மன தீச்சரமே.

**பண் : வியாழக்குறிஞ்சி**

நெருப்புரு வெள்விடை மேனிய ரேறுவர் நெற்றியின்கண்
மருப்புறுவன் கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த் தந்தையார் விறல் மாதவர் வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி புண்ணியரே.

**பண் : வியாழக்குறிஞ்சி**

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதி வரவருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

பண் : வியாழக்குறிஞ்சி

செற்றிட்டே வெற்றிச் சேர் திகழ்ந்த தும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள் கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச் சேர் முற்றற் கொம்புடைத் தடக்கை முக்கண் மிக்
கோவாதே பாய் மாதானத்துறு புகர்முக விறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய் தாமேயாமைப் பிரிவு செய்தவன திடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கலைச்செலக்
காணாதாரே சேராமெய்க் கழுமல வள நகரே.

## இரண்டாந்திருமுறை

பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் : நவரோஸ்

கரியின் மாமுகமுடைய கணபதி தாதைபல் பூதந்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தருமூதூர்
சரியின் முன்கை நன்மாதர் சதிபடமா நடமாடி
உரிய நாமங்களேத்துமொலி புனற்காழி நன்னகரே.

## நாலாந் திருமுறை

பண் : காந்தாரம் இராகம் :
நவரோஸ்

பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான் கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லைஅஞ்ச வருவதுமில்லை

## ஐந்தாம் திருமுறை

பண் : திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

நாரணன்னொடு நான்முகன் இந்திரன்
வாரணன் குமரன் வணங்குங் கழற்
பூரணன் திருப்பூவனூர் மேவிய
காரணன் னெனை யாளுடைக் காளையே.

## ஆறாந் திருமுறை

**பண் : திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி**

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற் கொல்வித்தார் போலுஞ்
செய்வேள் வித்தக்கனைமுன் சிதைத்தார் போலுஞ்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய் வேள்வி மூர்த்தி தலையறுத்தார் போலும்
வியன் வீழிமிழலை யிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்கமானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

**பண் : திருத்தாண்டகம்**

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புலனாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய் மூரடிகளை நான் கண்டவாறே

## ஏழாம் திருமுறை

**பண் : கொல்லி கௌவாணம் இராகம் : நவரோஸ்**

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதேயாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி யொன்றறியான்
எம்பெருமானிது தகவோவியம்பியருள் செய்யீர்?
திண்ணென வென்னுடல் விருத்தி தாரீரே யாகிற்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேனாளைக்
கண்ணறையன் கொடும் பாடனென்றுரைக்க வேண்டா
கடல் நாகைக் காரோண மேவியிருந்தீரே.

பண் : இந்தளம் இராகம் : மாயமாளவகௌளை

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய் திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலன் குமரன் பிள்ளை
தேவியார் கோற் றட்டி யாளால்
உங்களுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் றளியு ளீரே. — சுந்தரர் —

## திருவாசகம்

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட் டாதடி யேஇறைஞ்சி
இரந்த எல் லாம்எமக் கேபெற லாம் என்னும் அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேஉன்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தரமாய் அருளாய் நின்னை யேத்த முழுவதுமே
-மாணிக்கவாசகர் -

## திருவிசைப்பா

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றாணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
யுனகழ லிணையென் நெஞ்சினு ளினிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.
-திருமாளிகைத்தேவர்-

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க

அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தர்க்குப்
பல்லாண்டு கூறுதுமே.

-சேந்தனார் -

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

மாமலர் நாலையும் வட்டத்தின் மேவிடு
மாமலர் நாவினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தினுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே.

-திருமூலர் -

## பதினோராம் திருமுறை
## கபிலதேவநாயனார் அருளிச் செய்த
## மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

கைக்கும் பிணியொடு காலன் தலைப்படும் எல்லையினில்
எய்க்குங் கவலைக் கிடைந்தடைந் தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கட்டிரு வாளன் திருவடியே.
அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடிஅவலோ டெள்ளுண்டை கன்னல் – வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்அடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ்.

வாழைக் கனிபல வின்கனி மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள் ளுண்டைஎல் லாந்துறுக்கும்
பேழைப் பெருவயிற் றோடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

கனிய நினைவொடு நாடொறுங் காதற் படும்அடியார்க்
கினியன் இனியொரு இன்னாங் கிலம்எவ ரும்வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைபலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கோல் யானை முகத்தவனே.

யானை முகத்தான் பொருவிடையான் சேய்அழகார்
மான மணிவண்ணன் மாமருகன் – மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன்.

உளதள வில்லதோர் காதலென் நெஞ்சில்வன் னஞ்சம்உண்ட
வளரிள மாமணி கண்டன்வண் டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணிஎம் மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி யானைக் கணபதியே.

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் – மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம்.

போகபந் தத்தந்தம் இன்றிநிற் பீர்புனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாளம் பிறைஇறை யான்பயந்த
மாகபந் தத்தந்த மாமழை போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்தெந்தை செந்தாள் இணைபணிந் தேத்துமினே.

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத் – தூத்தழல்போற்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல்-அங்கை
முக்கட் கடாயானை முன்.

முன்னிளங் காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன்றன் மைத்துன னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களிறே இமை யோர்சிங்க மேஉமையாள்
தன்னிளங் காதல னேசர ணாஉன் சரணங்களே.

சரணுடை யேன்என்று தலைதொட் டிருக்க
முரணுடையேன் அல்லேனான் முன்னம் – திரள்நெடுங்கோட்
டண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத்தான் அமரர்
பண்டத்தான் தாள் பணியாப் பண்டு.

பண்டந்த மாதரைத் தாமென் றினியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக் குறுகுவர் கூடருணர்விற்
கண்டந்த நீண்முடிக் கார்மத வார்சடைக் கற்றை ஒற்றை
வெண்டந்த வேழமுகத்தெம் பிரானடி வேட்கையரே.

வேட்கை வினை முடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண்டருளும் அரன் சேயை – வாட்கதிர் கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண்.

விண்ணுதல் நுங்கிய விண்ணுமண் ணுஞ்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய் அன்பர்கள் பாய்மதமா
கண்ணுதல் நுங்கிய நஞ்சம் உண்டார்கரு மாமிடற்றுப்
பெண்ணுத னும்பிரி யாவொரு பாகன் பெருமகனே.

பெருங்காதல் என்னோடு பொன்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள் வீசி – ஒருங்கே
திருவார்ந்த செம்முகத்துக் கார்மதங்கள் சோர
வருவான்றன் நாமம் வரும்.

வருகோட் டருபெருந் தீமையும் காலன் தமரவர்கள்
அருகோட் டருமவ ராண்மையும் காய்பவன் கூர்ந்தஅன்பு
தருகோட் டருமர பிற்பத்தர் சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கட்செம் மேனிய ஒண்களிறே.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் – அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயகனே என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே.

திருச்சிற்றம்பலம்.

-கபிலதேவநாயனார் -

## திருநாரையூர்
## விநாயகர் திருவிரட்டை மணிமாலை
### கட்டளைக் கலித்துறை

முகத்தாற் கரியனென் றாலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென்றே மெய்மை உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர் அம்மான் பயந்த எம்மான்
உகந்தா னவன்ற னுடலம் பிளந்த ஒரு கொம்பனே .

- நம்பியாண்டார் நம்பி -

## பெரியபுராணம்

எடுக்குமாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

– சேக்கிழார் சுவாமிகள்

## திருவிளையாடற் புராணம்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

-பரஞ்சோதி முனிவர்

## சேக்கிழார் புராணம்

வானுலகு மண்ணுலகும் வாழமறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

-உமாபதி சிவாச்சாரியார் -

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுக -னடிபேணி
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை -கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய -மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிள் மலர்கொடு -பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய -முதல்வோனே

முப்புர மெரிசெய்த அச்சிவனுறைதரம்
அச்சது பொடி செய்த -அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை -இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் -பெருமாளே.

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானை முகப் பெருமாளே.

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைபருப் புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்

மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனு மருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே.

விடமடைசு வேலை யமரர்படை சூலம்
விசையன் விடுபாண மெனவேதான்
விழியுமதி பார வித முமுடை மாதர்
வினையின் விளை வேது மறியாதே
கடியுலவு பாயல் பகலிரவெனாது
கலவிதனில் மூழ்கி வறிதாய
கயவனறி வீன னிவனுமுயர் நீடு
கழலிணைகள் சேர அருள்வாயே
இடையர் சிறு பாலைத் திருடி கொடுபோக
இறைவன் மகள் வாய்மை யறியாதே
இதயமிக வாடி யுடைய பிளை நாத
கணபதியெனாம முறைகூற
அடையலவ ராவி வெருவ அடிகூர
அசலுமறி யாம லவரோட
அகல்வதென டாசொ லெனவுமுடி சாட
அறிவருளும் ஆனை முகவோனே.

திருச்சிற்றம்பலம்



உ

கணபதிதுணை



# பிள்ளையார் கதை

காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்றான் ஈன்றருளு மைந்தா –முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்குநீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ்
செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுக் தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில்
எப்பொழுதுங் கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் –கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த முப்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அறிபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

கதை

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்து தவழ் சோலை பிராசமா நகரில்
அந்தண னொருவனும் மாயிழை பொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமும் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரியு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பின்
மைந்தரில் லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கருள் செய்கென
எமையா ளுடைய யுமையாண் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண் சொற்கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்

பொன்றிடு மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவற்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழிந்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபி னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழ லியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோர்க் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் தன்னையுன் மணமக னாகப்
பெற்றிட வரிதெனப் பெயர்த்தவர் பேச
அருந்தவ முயற்சியா யனுகுவே னியானெனக்
கருந்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
றருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழிந்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமையி றவம்புரி வாவிக் கரையிற்

கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தற் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் பஃறலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலும்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைமலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனைப் புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி

மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்புமா கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்பனாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
ஆசன நல்கி யருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமஞ் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தோடு சாதிக் காயும்
கர்ப் பூரத்தோடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை படைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டி லுகந்துமுன் வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமு நீல கண்டமும்

மானு மழுவு மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமு னிப்ப
மரகத மேனி மலைமக டானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரிய யனிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுணரி ராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்திலுள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கா னாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டித் துகில்வீதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்

உம்ப ரெல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்வீடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பனிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக னோமச் சடங்குக ளியற்றத்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ பெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூ ழுஞ்சையம்பதி புக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வரும்கருங் குழலாண் மற்றுமுண் டோவெனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்
டொளிர்மணி பூணானு ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மிங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்வியே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்

பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி

அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற் றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ றென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றி ட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்த்த மூடிகமாய் வந்தவன் பொரவே
வந்தமூ டிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் வீழிபடைத் தருளும்
வல்லபை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தூங் குயர்புடை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்செங் கோட்டிற் கயல்கமு கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்

கணங்களுக் கரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவ ணேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்

வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரத மிடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்த்த செறுநரை வென்று
மருமலர் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துழாய் மார்பனும்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்
அக்குநீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடிசூ ரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றித ருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்

உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தால்
தீங்குறா தெல்லாஞ் செயமுண் டாகும்
கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரத மொன்றுளததை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி னினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரத நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூருவ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியொ ட ர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்குமங் கவன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசைசெய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுத லர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து

ஐந்துஅமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னென்னுமந் திரத்தால்
மாசக லிரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிப னுயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுர புத்திரன்
ஆகு வாகன எருடரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம் பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியனென் றுரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குப சாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணும் தகுதி யிருபிறப் பாளர்க்
குண்ணறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாக் கொடுத்து

நைமித் திகமென நவீறரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமு னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாடம யந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை யடைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேறறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகீரத னென்னும் பார்த்திப னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொ டர்ச்சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை
அட்ட போகத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்மணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடர்ச் சித்துத்
தாரியின் றறித்தவள் தன்னைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினி ரப்பொருள் பெறுவீர்

என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுதற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரிந்து கட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்வீர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்ச நான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடை சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்வீடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்வீடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக் கேதவன்

உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னயனமு நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாலகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
றரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோளீ ராறும்
மாணயி லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட

இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரு மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்டர் ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டுநீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டெம்வினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி

அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவரும் சாட்சி யிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கிநீ யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டமைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற் றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்

வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகத்துக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநா லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை இன்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதிவி நாயகற் கானவெ ழுத்தும்
மூன்றெழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமும் மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ணாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கொங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி

மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலரக்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தலைக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பானறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாதி திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர்நாயகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னிதெனச்

சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைந்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட நோற்றபின்
மாதுமை யடைந்த வன்றாள் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவென
தேனேர் மொழியா டெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறைபவன் கதைசொல வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுமுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாதெனத்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குறீ றணியும் மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததுங்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே

இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையி லுற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடு மிடையா லிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ணோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியமில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான வுடைமணி கட்டித்

தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல முடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழு திவளிங் கிருக்கலா காதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர்தம் மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
தூசுதுய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாம் துணிந்துவே றாகத்
தூசரும் மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை யவள்புகுந் திருப்ப
அவ்வை செல்ல அகங்க டோறும்

வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர வற்றிப்
பேணிய புழுவாயப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றி
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்தினின் றாட
மெத்தவுண் ணடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுகலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்துமூ வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு வவலும் மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்

கற்பக நம்பி கருணைபெற் றதன்பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட் டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுள மெலிந்தே
அவ்வை தன்மனை யாங்கவ ரணுக
எய்துந் தாகமு மிளைப்புங் கண்டு
செவ்வே யவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி யென்பவ டன்னை
அப்பமும் நீரு மரசற் கருளெனச்
செப்பிய வன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி யென்றவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையி னேற்றிக்
கொண்டூர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்திரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்றாள் ஈன்றருளு மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் – உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் – சொற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதேறும் வீரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாத தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் – மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்



# போற்றித் திரு அகவல்

அருள்புரிந்து அருளும் அரசே போற்றி
இருவினை துடைக்கும் இறைவா போற்றி
மறைமுனி ஒருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற்று இறைவன் கையில் கொடுப்ப
வேலனும் நீயும் விரும்பி முன் நிற்ப
ஒருநொடி அதனில் உலகெலாம் வலமாய்
வரும் அவர் தமக்கு வழங்குவோம் யாம் என
விரைவுடன் மயில்மிசை வேலோன் வருமுன்
அரனை வலம்வந்து அக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றிப்
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்து உனை வாவியில் செல்லக்
கண்ணிலான் இவனெனக் கரந்து அவன் போகக்
கரமிசை ஏறிக் காணாது இரங்கி
உரை தடுமாறி உள்ளம் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ என்னக்
கூகூ என்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புரம் எரிக்க
இப்புவி அதனை இரதம் ஆக்கித்
தினகரன் மதிதேர்ச் சில் லியாகப்
பொருவரு மறைகளே புரவி யாகச்
சங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலை சிலையாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கும் நெடுந்தேர் தன்னில்
விக்கினம் தீர்க்கும் விநாயக நம எனச்
சிக்கென இறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்

அச்சறுத்து அருளும் அரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந்து உடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகிலம் ஈன்று அருளும் அம்மை தமக்குத்
திருமகன் ஆகிய செல்வா போற்றி
அற்றவர்க்கு அருள்புரி அரசே போற்றி
கற்றவர் மனதிற் காண்பாய் போற்றி
பாசாங்குசம் கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநரகு எழுபிறப்பு அறுப்பாய் போற்றி
எழுமையும் எமக்கு இங்கு இரங்குவாய் போற்றி
துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிகர் ஒற்றை மருப்பா போற்றி
வரமிகுமரிதிரு மருகா போற்றி
சுரர்தொழும் முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழும் நம்பா போற்றி
வல்லபைக்கு உரிய மணாளா போற்றி
கயமுகத்து அவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமுக மூஷிக வாகனா போற்றி
ஓங்காரத் தனி உருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கு ஒரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோல் துலங்கிய கோட்டைக்
கண்டகம் ஆகக் கைதனில் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி .

போற்றித் திரு அகவல் முற்றிற்று.



# வருக்கைக் கோவை

அன்புடைக் கடவுளர்க்கு அதிபதி செயசெய
ஆபத்து அகற்றும் ஐங்கர செயசெய
இந்துச் சடைமுடி இறைவா செயசெய
உன்னிய முடிக்கும் ஒருவா செயசெய
ஊர்மனை சந்தி உகந்தாய் செயசெய
எம்பெருமானே ஏகனே செயசெய
ஏழுலகுந் தொழ இருப்பாய் செயசெய
ஐயா கணங்கட்கு ஆதி செயசெய
ஒற்றை மருப்பை உடையாய் செயசெய
ஓங்கிய கரிமுகம் உற்றாய் செயசெய
ஔவியம் இல்லாதவனே செயசெய
அ, ஃகர அணிந்த ஆதீ செயசெய
கண்மூன்று உடைய களிறே செயசெய
ஙப்போல் மழு ஒன்று ஏந்தீ செயசெய
சங்கரன் தேரச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இ, டமுடை விக்கினேசுரா செயசெய
இ, ணங்கிய அன்பர்க்கு இனியாய் செயசெய
தத்துவம் உறைதரு சாமீ செயசெய
நன்னெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக்கு இனிய பாலா செயசெய
மன்றுள் ஆடி மகனே செயசெய
இ, ணக்கரைக் களையும் இறைவா செயசெய
அ, ரவக் கிங்கினி அணிவாய் செயசெய
இ, லக்கக் கொம்பு ஒன்று ஏந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய
அ, ழகிய வேலனுக்கு அண்ணா செயசெய
இ, ளமத யானை முகத்தாய் செயசெய

இ, றக்கரி சாடும் இறைவா செயசெய
அ, னந்தல் ஆடும் அரசே செயசெய
கரமைந்து உடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல் செயசெய
கிரியில் பாரதம் தீட்டினாய் செயசெய
கீழ்மை ஒழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டையம் கண்ணுமை மகனே செயசெய
கேதார ப்ரியம் ஆனாய் செயசெய
கையில் சக்கரம் உடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய .

வருக்கைக் கோவை முற்றிற்று

உ
சிவமயம்



## தத்துவஞானத் திரு அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரைஞாணும்பூந்துகில்ஆடையும்
வன்னமருங்கில்வளர்ந்து அழகுஎறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டுசெவியும்இலங்கு பொன்முடியும்
திரண்டமுப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான

அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதுஎன்னைஆட்கொள்ளவேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்தியமுதல்ஐந்தெழுத்தும்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென்உளந்தனில்புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென
வாடாவகைதான்மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால்கொடுவினை களைந்தே
உவட்டாஉபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாதஞானத்தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறுகருணையின்இனிதெனக்குஅருளிக்
கருவிகள்ஒடுங்கும்கருத்தினைஅறிவித்(து)
இருவினை தன்னை அறுத்துஇருள்கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்

உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னைஅறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும்ஆனந்தத்துஅழுத்திஎன்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்குஅணுவாய்அப்பாலுக்குஅப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!.



## விநாயக கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநாயகர்
காக்க வாய்ந்த சென்னி
யளவுபடாவதிகசவுந் தரதேக
மதோ ற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரா்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின் வளரு மதரங்கச முகர் காக்க
தாலங்கணக் கரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.

காமருபூ முகந் தன்னைக் குணேசர்நணி
காக்க களம் கணேசர் காக்க
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கமிரண் டையுந்தரா தரா்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க.

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர் காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர் காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவும்
புத்திரர் தென்னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவார் தனர்மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னர்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசனந் தனரே காக்க

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க விராக்
கதர்பூதம் உறுவே தாள
மோகினியைபே இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசார்தாம் விரைந்து காக்க,

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிச்

சாதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க.
காமர்பவுத் திரர்முன் னான
விதியாகுஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விருமப்பிக் காக்க.

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுகமோ
திடினும்பா லிடையூறு றொன்றும்
ஒன்றுறா, முனிவரர்கா ளறிமின்கள்
யாரொரு ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணி'யறவச்
சிரதேச மாகி மன்னும்,

விநாயகர் கவசம் முற்றிற்று.

## கச்சியப்ப முனிவர் அருளிய விநாயகர் அட்டகம்

1. பந்த மகற்றும் அனந்த குணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாங் கணபதியை
அன்பு கூரத் தொடுகின்றாம்.

2. உலகம் முழுவதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருள் எவன் அவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்!

உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களை கண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணமடைகின்றாம்.

3. இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவிழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர் வாழ்பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனான் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதி பொற்
சரணஞ் சரண மடைகின்றாம்.

4. மூர்த்தியாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நல
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன்
அப்போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.

5. செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவின்
ஊட்டுவிப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம்.

6. வேதம் அளந்து அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர

நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன்
அப்போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணமடைகின்றாம்.

7. மண்ணின் ஓர் ஐங்குணமாகி
வதிவான எவன் நீரிடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன், தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இறைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணமடைகின்றாம்.

8. பாச அறிவிற் பசி அறிவிற்
பற்றற் கரிய பரன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கு மவ யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றிமேலாம் அறிவான
தேசனெவன் அக்கணபதியைத்
திகழச் சரணமடைகின்றாம்.



உ

சிவமயம்

## உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த

# கொடிக்கவி.

கட்டளைக் கலித்துறை

1. ஒளிக்கு மிருளுக்கு மொன்றேயிட மொன்று மேலிடிலொன்
றொளிக்கு மென்று மிருளடரா துள்ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுநீ திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடி கட்டினனே.

2. பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியேது இரவேது - அருளாளா
நீபுரவா வையமெலாம் நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.


3. வாக்காலும் மிக்க மனந்தாலும் என்காலுந்
தாக்கா துணர்வரிய் தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமருள் நல்கக் கொடி

4. அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

திருச்சிற்றம்பலம்

# சோடச கணபதி

1. பாலகணபதி
2. தருணகணபதி
3. பக்த கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. துவிச கணபதி
7. பிஸ்சவ கணபதி
8. உச்சிட கணபதி
9. விக்கிர கணபதி
10. சஷிப்ர கணபதி
11. ஏரம்ப கணபதி
12. இலட்சுமி கணபதி
13. மகா கணபதி
14. விஜய கணபதி
15. நிருத்த கணபதி
16. ஊர்த்து கணபதி



ஆலயத்தின் தேர்